ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 243/32—1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා —1976.12.17
243/32 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண்: டபிளியு. 68(70)/76.

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

*பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மீது, சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

வி. கொபல்லவ,
சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு.
1976 திசெம்பர் 17.

#### ஒழுங்குவிதிகள்

1. இந்த ஒழுங்குவிதிகள், அவசரகால (தோட்ட வேலையாட்களின் மேலதிக விசேடப் படி) ஒழுங்குவிதிகளென எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்கென ஆணையாளர் தகுதிவாய்ந்த அதிகாரியாயிருத்தல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி இந்த ஒழுங்குவிதிகளால் அத்தகைய அதிகாரிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை தொழிற் திணைக்களத்தின் அலுவலர் எவருக்கேனும் கையளிக்கலாம்.

3. எழுத்திலுள்ள வேறேதேனும் சட்டத்தில் அல்லது வாய்மொழி மூலமான, எழுத்து மூலமான, வெளிப்படையான அல்லது உட்கிடையான ஏதேனும் ஊழியவொப்பந்தத்தில் உள்ள எவையேனும், எவ்வாறிருப்பினும், இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளானவை வலுவும் பயனுமுடையனவாதலும் வேண்டும்; அதற்கிணங்க, அத்தகைய ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் அத்தகைய சட்டம் அல்லது அத்தகைய ஒப்பந்தத்துக்குமிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை நேரும்பட்சத்தில், அத்தகைய ஏற்பாடுகள், அத்தகைய ஒவ்வாமையின் அளவுக்கு, ஏதேனும் அத்தகைய சட்டம் அல்லது அத்தகைய ஒப்பந்தத்திற்கு மேலோங்கி நிற்றல் வேண்டும்.

4. (1) தேயிலை வளர்த்தல், உற்பத்தி செய்தல் தொழிலில் அல்லது இரப்பர் வளர்த்தல், உற்பத்தி செய்தல் தொழிலில் அல்லது தென்னை வளர்த்தல் தொழிலிலுள்ள ஒரு வேலையாளின் தொழில்தருநர் ஒவ்வொருவரும், 1972, நவம்பர் 1 ஆந் தேதியிலிருந்து அத்தகைய வேலையாளுக்கு, இந்த ஒழுங்குவிதிகளின் அட்டவணையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு இதன்கண்ணிதன்மேல் " மேலதிக விசேடப் படி " எனக் குறிப்பிடப்பட்ட ஒரு படியைக் கொடுத்தல் வேண்டும்.

(2) இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான மேலதிக விசேடப் படியானது, கூலி நிருணயசபைகள் கட்டளைச்சட்டத்தின் 20 (2) (அ) (ii) என்னும் பிரிவின்கீழ் தேயிலை வளர்த்தல் உற்பத்தி செய்தல் தொழில் அல்லது இரப்பர் வளர்த்தல், உற்பத்தி செய்தல் தொழில், அல்லது தென்னை வளர்த்தல் தொழில் என்பனவற்றின் கூலி நிருணய சபைகளாற் செய்யப்பட்ட எவையேனும் முடிவுகளின்கீழ் கொடுக்கற்பாலதான விசேடப் படிக்கு மேலதிகமானதாயிருத்தல் வேண்டும்.

5. நாலாம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட தொழிலிலுள்ள எவரேனும் வேலையாளுக்கு இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான மேலதிக விசேடப் படியைக் கொடுத்தல், எல்லா நோக்கங்கட்கும், கூலி நிருணய சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் அந்தத் தொழிலுக்கான கூலி நிருணய சபையால் செய்யப்பட்ட முடிவாகக் கருதப்படுதல் வேண்டும்; அதற்கிணங்க, அந்தக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், கூலி நிருணய சபையொன்றில் வேறெவையேனும் முடிவுகளுக்கு ஏற்புடைத்தாகும் விதத்தில் அந்த ஏற்பாடுகள் அத்தகைய கொடுப்பனவுக்கும் அதன் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

6. நாலாம் ஒழுங்குவிதியிற் குறிப்பிடப்பட்ட மூன்று தொழில்களுள் எதிலேனும், 1972 நவம்பர் 1 ஆந் தேதிக்கு நேரே முற்போந்த நாளன்று எவரேனும் தொழில்தருநரால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த வேலையாள் ஒவ்வொருவரும், அத்தகைய தொழில்தருநரின் வேலையாளாகத் தொடர்ந்திருந்து வரும்வரை, சம்பளம், படி அல்லது மேலதிக விசேடப் படி நீங்கலாக எப்பெயராலும் அல்லது குறிப்புப் பெயராலும் அழைக்கப்படுவனவான வேறு பணக்கொடுப்பனவுகள் தொடர்பாக, 1972, நவம்பர் 1 ஆந் தேதிக்கு நேரே முற்போந்த நாளன்று அத்தகைய வேலையாள் எந்த நியதிகட்கும் நிபந்தனைகட்கும் அமையவிருந்தாரோ அவற்றிலும் குறைந்த அனுகூலமானவை யல்லாத அத்தகைய நியதிகள் மீதும் நிபந்தனைகள் மீதும் அத்தகைய தொழில்தருநரால் தொடர்ந்து வேலையில் வைத்திருந்து வரப்படல் வேண்டும்.

7. இந்த ஒழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி—

(அ) " ஆணையாளர் ", " வேலையாள் ", " தொழில்தருநர் ", " கூலி ", " தொழில் " என்பன முறையே (136 ஆம் அத்தியாயமான) கூலி நிருணய சபைகள் கட்டளைச்சட்டத்தில் உள்ளவாறான அப் பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) " தேயிலை வளர்த்தல், உற்பத்தி செய்தல் தொழில்," " இறப்பர் வளர்த்தல், உற்பத்திசெய்தல் தொழில்," "தென்னை வளர்த்தல் தொழில்" என்பன முறையே, (136 ஆம் அத்தியாயமான) கூலி நிருணய சபைகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய தொழில் தொடர்பாகத் தொழில் அமைச்சரால் இடப்பட்ட கட்டளையில் உள்ளவாறான அப்பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(இ) " சிறுபிள்ளையான வேலையாள் " என்பது 16 வயதிற்குக் குறைந்த ஓர் ஆண் வேலையாள் அல்லது 15 வயதிற்குக் குறைந்த ஒரு பெண் வேலையாள் எனப் பொருள்படும்.

## அட்டவணை

இதனடியில் I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட ஒரு வேலையாளுக்கு இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் கொடுக்கற்பாலதான மேலதிக விசேடப் படியானது இதனடியில் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவுக் குறிப்பில் தரப்பட்டுள்ள வீதத்திலிருத்தல் வேண்டும்.

| I ஆம் நிரை<br>வேலையாள் வகுப்பு | II ஆம் நிரை<br>ஒரு சாதாரண வேலை நாளுக்கான மேலதிக விசேடப் படி |
|---|---|
| 16 வயதுக்குக் குறையாத ஆண் வேலையாள் .. | 18 சதம் |
| 15 வயதுக்குக் குறையாத பெண் வேலையாள் .. | 12 சதம் |
| சிறுபிள்ளையான வேலையாள் .. .. | 12 சதம் |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது